# இல்லறத்தார்க்குரிய தசதர்மம்

**J நீலகேசி**
**சென்னை**

**ஆய்வுச் சுருக்கம்:**

இல்லறத்தார் போற்றி பின்பற்ற வேண்டிய நெறிகள் 'தச தர்மம் ' என்ற நூலில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.

**முதன்மை சொற்கள்:** ஐந்து அணு விரதங்கள், கொலை, பொய், களவு, பிறன்மனை விழைதல், மிகு பொருள் விரும்புதல், கள், தேன், இரவுண்ணல், பெரியாரைப் பழித்தல் ஆகியன நீக்கல்

**முன்னுரை**

இந்நூல் சமண சமயத்தில் இல்லறத்தார்களுக்குரிய அறநெறிகளைத் தொகுத்து விளக்குவதாகும். இல்லறத்தார்களுக்குரிய ஐந்து அணுவிரதங்களோடு, புலால், தேன் கள் ஆகியவற்றோடு இரவுண்ணுதலையும் தவிர்த்து துறந்தாரைப் பணிந்து போற்றுவதோடு கூடிய பத்து வித அறங்களைக் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. அவ்வாறு கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகளையும், கடைப்பிடிக்காவிடில் ஏற்படும் தீமைகளையும் விளக்கி அறநெறிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறது. இந்நூல் இருபத்து ஆறு கலிவிருத்தங்களைக் கொண்டது.

கொல்லாமை, பொய்யாமை,கள்ளாமை, காமத்தை ஒல்லாமை, ஒண்பொருளை வரைதல், புலால் உண்ணாமை, தேன் உண்ணாமை, கள் உண்ணாமை, இருளில் உண்ணாமை, நல்லாரைப் பணிதல்

இந்நூலின் ஆசிரியரின் பெயர் அறியப் பெறவில்லை. முதல் பாடலில் குரு வணக்கமாக ‘குணதரன் சேவடி வணங்கித் தசதர்மநெறி அறைகுவன்’ என்ற அடியில் நூல் தொடங்குகிறது.

அருங்கலச்செப்பு எனும் நூலும் சமண சமய இல்லற நெறிகளை விளக்கும் நூற்று எண்பது குறள் வெண்பாக்களைக் கொண்ட நூலாகும். இந்நூல் சமந்தபத்ர ஆச்சாரியாரால் இயற்றப் பெற்ற இரத்தின கரண்ட ஸ்ராவகாசாரம் என்னும் நூலின் தமிழாக்கம் ஆகும்.

இல்லறத்தார்க்குரிய அணுவிரதங்கள்:

ஆற்றிய நல்விரதத்து அரசனும் தேவியரும்
ஏற்றுமின் அடிகள் எனக்கு உரியனதாம் என்று இறைஞ்சிக்
கூற்றுவனைக் குதித்து உயர்ந்த கோட்டம் இல் சீர் மாதவரும்
ஏற்றினார் அணுவிரதம் இல்லறத்தாற்கு உரியனவே
-3, தசதர்மம்

அருங்கலச்செப்பு, சீவக சிந்தாமணி, நீலகேசி, யசோதர காவியம், மேருமந்தர புராணம், ஆகிய நூல்கள் அணுவிரதங்களை கீழ்க் கண்டவாறு வரிசைப் படுத்துகின்றன.

‘அணுவதம் ஐந்தும் குணவதம் மூன்றும்
உணர்நான்கு சிக்கா வதம்’
-65, அருங்கலச்செப்பு

‘பெரிய கொலைபொய் களவொடு காமம்
பொருளை வரைதலோடு ஐந்து’
- 66, அருங்கலச்செப்பு

‘ஐவகைப் பொறியும் வாட்டி, ஆமையின் அடங்கி, ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை விளக்கும் நின்றுஎரிய விட்டுப்
பொய் கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்’
- 2824, சீவக சிந்தாமணி

‘கோறல் பொய்த்தல் கொடுங்களவு நீக்கிப் பிறர்மனைகள்மேல்
சேறல் இன்றிச் செழும்பொருண்மேல் சென்ற சிந்தை வேட்கையினை
ஆறுகிற்பின் அமருலகம் நுங்கட் கடியதாம் என்றான்
நீறும் ஓடும் நிழன்மணியும் பொன்னும் நிகரா நோக்குவான்’

- 40, நீலகேசி

பெருகிய கொலையும் பொய்யும் களவோடு பிறன்மனைக்கண்
தெரிவிலாச் செலவும் சிந்தை பொருள்வயின் திருகு பற்றும்
மருவிய மனத்து மீட்சி வதம் இவை ஐந்தோடு ஒன்றி
ஒருவின புலைசு தேன்கள் ஒழுகுதல் ஒழுக்கம் என்றான்
-236, யசோதர காவியம்

‘பெரியகொலை பொய்களவு பிறர்மனையில் ஒருவல்
பொருள்வரைதல் மத்தம்மது புலைசுஉணலின் நீங்கல்
பெரியதிசை தண்டம்இரு போகம்வரைந் தாடல்
மரீஇயசிக்கை நான்கும்இவை மனையறத்தார் சீலம்’

-356, மேருமந்தர புராணம்

**இல்லறத்தார்க்குரிய பத்து கடமைகள்:**

‘கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தை
ஒல்லாமை ஒண்பொருளை வரைதலோடு இவைபிறவும்
பொல்லாத புலசுதேன்கள் இருள் உண்ணா நிலைமையொடு
நல்லாரைப் பணிவதுவும் நாமுறையே பயன் உரைப்பாம்’

-4, தசதர்மம்

| எண் | பொருள் | நன்மை | தீமை | பொது | பாடல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | குரு வணக்கம் | - | - | 2 | 2 |
| 2. | அணுவிரதங்கள் | - | - | 1 | 1 |
| 3. | பத்து கடமைகள் | - | - | 1 | 1 |
| 4. | கொல்லாமை | 1 | 1 | - | 2 |
| 5. | பொய்யாமை | 1 | 1 | - | 2 |
| 6. | கள்ளாமை | 1 | 1 | - | 2 |
| 7. | காமத்தை ஒல்லாமை | 1 | 1 | - | 2 |
| 8. | ஒண்பொருள் வரைதல் | 1 | 1 | - | 2 |
| 9. | புலால் உண்ணாமை | 1 | 1 | - | 2 |
| 10. | தேன் உண்ணாமை | 1 | 1 | - | 2 |
| 11. | கள் உண்ணாமை | 1 | 1 | - | 2 |
| 12. | இருளில் உண்ணாமை | 1 | 1 | - | 2 |
| 13. | மௌனம் | 1 | - | - | 1 |
| 14. | நல்லாரைப் பணிதல் | 2 | 1 | - | 3 |
| | மொத்தம் | 12 | 10 | 4 | 26 |

இக்கருத்தை ஒட்டிய கீழ் காணும் திருக்கலம்பகப் பாடலையும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

விரையார் மலர்மிசை வருவார் திருவறம்
விழைவார், கொலையினை விழையார்; பொய்
உரையார்; களவினை ஒழுகார்; பிறர்மனை
உவவார்; மிகுபொருள் உவவார்; வெம்
சுரையால் உணர்வினை அழியார்; அழிதசை
துவ்வார்; விடம்என எவ்வாறும்
புரையார்; நறவினை நுகரார்; இரவுணல்

புகழார்; குரவரை இகழாரே!

-67, திருக்கலம்பகம்

'அருகன் வகுத்த இல்லறம் துறவறம் என்பவற்றுள் இல்லறநெறியின் வழி செல்வோர் உயிர்க்கு கொலை, செய்யார்; பொய் உரையார்; பிற பொருளை களவர்; பிறன்மனை விழையார்; மிகுபொருள் விரும்பார்; மதியை மயக்கும் மதுவை அருந்தார்; புலால் உண்ணார்; தேனை நஞ்செனக் கருதி உட்கொளார்; இரவில் உண்ணார்; பெரியோரை இகழார்,' எனும் இப்பாடலால் இல்லற ஒழுக்க நெறி வலியுறுத்தப் பெற்றது.

‘மிசையார் தசை இருள் மேவார் நறைமது விண் பெறினும்
இசையார் கொலை பொய் களவு அறியார் இளம் தோகையர் மாட்டு
அசையார் பொருள் வரைந்து ஐவரைப் பேணுவர் ஐம்புலன் மேல்
நசை ஆறிய பிண்டியார் அடியார் எங்கள் நாயகரே’

-83, திருநூற்றந்தாதி

பிண்டியாரின் அடிபற்றி தொழுது வழிநடப்போர் தேவ பதவி பெறுவதாயினும், இரவு உண்ணார்; தசையும் கள்ளும் தேனும் தொடார்; கொலை பொய் களவு அறியார்; இளம்நங்கையரிடம் மனம் செல்லார்; பொருள் வரைந்து பஞ்சபரமேட்டியை வழிபட்டு போற்றுவர்' என திருநூற்றந்தாதியில் அவிரோதி ஆழ்வாரும் இக்கருத்தையே வழிமொழிகிறார்.

‘மடுக்கும் நறவு தெளி இருள் உண மடவார் விழைவு
கெடுக்கும் கொலை பொய் களவு புலால் பொருள்கேளிர் சுற்றம்
விடுக்கும் முனிவரை வைதல் ஒல்லார் முத்த வெண்குடைக்கீழ்
அடுக்கும் பணக்குடையார் அடி நீழல் அடைந்தவரே’

**-48, திருமேற்றிசை அந்தாதி**

‘வெண்முத்து மாலைகள் அசையும் முக்குடையின் கீழ் அடுக்கிய நாகக் குடையின் நிழலில் அமர்ந்துள்ள அருகப் பெருமானை அடைந்த அடியார்கள் தேனையும் கள்ளையும் அருந்தார்; இரவில் உண்ணார்; பிறன்மனை விரும்பார்; கொலை களவு செய்யார்; பொய் உரையார்; மிகு பொருள் விரும்பார்; சுற்றத்தையும் நட்பையும் துறந்து தவம் இயற்றும் பற்றறுத்த முனிவர்களை இகழ்ந்துரையார்’, என திருமேற்றிசை அந்தாதியும் எடுத்தியம்புகிறது.

கலிங்கத்துப்பரணி இயற்றிய ஜெயங்கொண்டார் தமது ஊரின் பெயரில் இயற்றிய தீபங்குடி பதிகத்தில் தசதர்மங்களைப் பட்டியலிடுவதைக் கீழ் காணும் பாடலில் காணலாம். சோழ நாட்டை ஆட்சி புரிந்த 'அபயன்' என்னும் முதலாம் குலோத்துங்க சோழ மன்னனைக் காண நேரில் சென்ற போது 'நுமது ஊர் யாது?'

எனும் மன்னனது கேள்விக்குப் பதிலாக மேற்குறிப்பிடப் பெற்ற கருத்தை ஒட்டிய இப்பதிகத்தைப் பாடியதாக 'தமிழ் நாவலர் சரிதை' உரைக்கின்றது.

'செய்யும் வினையும் இருள் உண்பதுவும்
தேனும் நறவும் ஊனும் உயிரும்
பொய்யும் கொலையும் களவும் தவிரப்
பொய்தீர் அறநூல் செய்தார் தமது ஊர்
கையும் முகமும் இதழும் விழியும்
காலும் நிறமும் போலும் கமலம்
கொய்யும் மடவார் கண் வாய் அதரம்
கோபம் கடியும் தீபங்குடியே!'

**-தீபங்குடி பதிகம்**

திருஇரட்டைமணிமாலை என்னும் நூலிலும் சமண சமய சாவக நோன்பிகளின் இப்பத்து ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன.

'கரவுஇரவுணல் கொலை கள்தேன் புலசுமற்றும்
விரவம் பிறர்மனை பொய் வேட்கை - பரவும்
உறுவர் பழித்தல் என இவையோர் பத்தும்
இறுகலை என்றான் இறை'

**-17, திருஇரட்டைமணிமாலை**

'களவு, இரவில் உண்ணல், கொலை, கள், தேன், புலால், பிறன்மனை, பொய், பொருள் வேட்கை, பெரியோரைப் பழித்தல், ஆகிய பத்தும் கட்டாயமாக முற்றிலும் நீக்க வேண்டியவை என அருகன் அருளினார்' என இப்பாடல் தெரிவிக்கிறது.

ஆக, கொலை பொய் களவு பிறன்மனை விழைதல் மிகு பொருள் விரும்புதல் ஆகியவற்றை அறவே விலக்கும் ஐந்து அனுவிரதங்களோடு கள் தேன் புலால் நீக்கி இரவில் உண்ணாது, பெரியோரைப் பழிக்காது வாழ்வதே இல்லறத்தாருக்குரிய தச தர்மமாகும்.

**துணை நூற்பட்டியல்:**

1. அருங்கலச்செப்பு -? - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
2. சீவக சிந்தாமணி - திருத்தக்கத் தேவர் - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
3. நீலகேசி -? - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
4. யசோதர காவியம் -? - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
5. மேருமந்தர புராணம் - வாமன முனிவர் - தமிழ் இணையக்கல்விக் கழகம் – நூல்கள்

6. தசதர்மம் - தோத்திரத் திரட்டு - பல ஜினதாசர்கள் - தமிழ் இலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம் - தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்
7. இல்லற நெறி ப 107
8. திருக்கலம்பகம் - உதீசி தேவர் - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
9. திருநறுங்கொண்டை மலைப்பதிகம் -?- தோத்திரத் திரட்டு - பல ஜினதாசர்கள் - தமிழ் இலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு, மூன்றாம் பாகம் - தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்
10. தீபங்குடி பதிகம் - ஜெயங்கொண்டார் - தோத்திரத் திரட்டு
11. திருநூற்றந்தாதி - அவிரோதி ஆழ்வார் - தமிழ் இணையக்கல்விக் கழகம் - நூல்கள்
12. திருமேற்றிசை அந்தாதி -? - ஜைன இளைஞர் மன்றம்
13. தமிழ் நாவலர் சரிதை – தொகுப்பாளர் - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை - இணையம்